(அ) உசிலம்பட்டி தாலுக்காவில், புத்தூர் மலைக்குப் பக்கத்தில் நூற்பாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடுகள்)

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருநதால் அவ்வுரைஉறு ப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்

(அ) கர்நாடக மாநில அரசை மத்திய அரசு கலைத்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகுதான் பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம். எல்லோரும் உட்காருங்கள். ஒவ்வொருவராகப் பேசலாம். முதலில் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அதிகாலையில் பத்திரிகையைப் புரட்டிய உடனே, நாட்டிலே எதற்காக பேச்சுரிமை, ஓட்டுரிமை, எழுத்துரிமை எல்லாம் கொடுத்தார்களோ அதெல்லாம் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு செய்தி இருநதால் பேசலாம். (குறுக்கீடு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அதன் காரணமாக கர்நாடக அரசு , . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசு தொடர்பான செய்தி. வேறு செய்தி இருந்தால் பேசலாம். அடுத்து திரு. பொன். விஜயராகவன்.

1989 ஏப்ரல் 22]

(ஜனதா தள உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 28 ஆம் தேதியன்று காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து பேச இருந்தபோது ஜனநாயகப் படுகொலை . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : அது படுகொலையோ இல்லையோ, அதற்கும் இந்த அவைக்கும் சம்பந்தமில்லை.

(ஆ) கர்நாடக முதல்வரோடு காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி தமிழக முதல்வர் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : 28 ஆம் தேதியன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களும் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கலைத்ததைப் பற்றியல்ல. இது காவிரிப் பேச்சு பற்றியது. எல்லாவற்றிற்கும் நீங்கள் எழுந்திருககக் கூடாது.

திரு. பொன். விஜயராகவன் : நம்முடைய தமிழ்நாட்டுக்கு முக்கியமான பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினைபற்றி பேசுவதாக இங்கே சொல்லப்பட்டது. ஏற்கெனவே நடுவர் மன்றத்திற்கு விட வேண்டுமென்கின்ற கருத்துக்கு மாறாக காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து இரண்டு முதல்வர்களும் பேசலாம் என்கின்ற ஒரு நிலைமை இன்றைக்கு முற்றிலுமாக சிதைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் சட்டமன்றத்திலே தங்களுடைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அவகாசம் தருவதற்கு முன்னாலேயே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரிப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்.)

திரு. பொன். விஜயராகவன் : அதோடு தொடர்புடைய காரியத்தை பற்றித் தானே நாம் பேசிக் கொண்டிருக்கிறேன். தலைவரவர்களே, அதோடு தொடர்புடைய காரியத்தைப் பற்றித் தானே பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் பேசுவதற்கு உரிமை கிடையாது என்று யாருக்கும் சொல்வதற்கு உரிமை இல்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிச் சொல்கிற சொற்கள் வந்தால்தான் தவறே தவிர, நடைபெற்று இருக்கிற நிகழ்ச்சிகளால் பேச